வது அப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டால் கட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும் குறிப்பிட்ட காலம்வரையில் பணம் கட்டாவிட்டாலும் வைத்திய வசதி கொடுக்கவேண்டுமென்ற முடிவுதான் எடுக்கப்பட்டிருக்கிறது.

வெளியூர் பஸ்களில் பெயர்ப்பலகை.

* 546 வினு—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

வெளியூர்களுக்கு செல்லும் சாதாரண பேருந்துகளில் அவைகள் போகின்ற ஊர்களை அறிவிக்கின்ற பலகைகள் மாட்டப்படும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தமிழ் நாடு அரசு போக்குவரத்துறை பேருந்து செல்லும் வழியிலுள்ள ஊர்களின் பெயர்கள் அனைத்தையும் பேருந்தின் மீது எழுதுவது நடைமுறையில் இயலாது என்பதால், அவ்வாறு எழுதும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : இந்த ஊர் பெயர்களை பக்கத்திலே தனியாக ஒரு பலகையில் எழுதி காட்டுகிற வகையில் செய்யலாம். குறிப்பாக இப்போது வெளி ஊர்களுக்குச் செல்லும் பஸ்களுக்கும் சென்னை நகரில் ஓடுகிற பஸ்களுக்கும், எந்தவிதமான வேறுபாடும் தெரிவதில்லை. ஆகவே, கிராமப்புற ஜனங்கள் எந்த பஸ் வருகிறது என்று தெரிந்து கொள்ள முடியாமல் சென்னை நகரில் பஸ் ஏறுகிறபோது தொல்லைக்குட்படுவதை உத்தேசித்து இந்த பஸ்களின் வர்ணத்தையாவது மாற்றுவதற்கு ஏதாவது உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தனியார் துறையில் ஓடுகிற பேருந்துகளில் பக்கவாட்டில் அவைகள் செல்கிற ஊர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்பது தெரிந்ததே. ஆனல் அரசுத் துறையில் ஓடுகிற பேருந்துகள் அடிக்கடி வழித்தடங்கள் மாறுகிற காரணத்தினுல் அப்படி பக்கவாட்டில் எழுதுவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஆனல் பேருந்துகள் செல்கிற ஊர்கள், இடையிலுள்ள சில முக்கிய ஊர்கள் இவைகள் எல்லாம் பஸ் நெற்றியில் காண்பிக்கப்படுகின்றன.

திரு. கொளத்தூர் கோதண்டம்: :பக்கவாட்டில் எழுதுவதற்குப் பலகை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். வழித்தடங்கள் மாறுவதால் அப்படி எழுதுவதற்கு வசதியில்லை என்றர்கள். ஆனல் சிறு சிறு பலகைகளில் ஊர்களின் பெயர்களை எழுதி பாசஞ்சர் ஸீட்டுக்கு அருகில் உள்ள கம்பியில் அவற்றை மாட்டினுல் தெரிந்துகொள்ளமுடியும். அதையாவது செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : உறுப்பினர் அவர்களின் கருத்து நன்றுகவேதான் தோன்றுகிறது. அது நடைமுறையில் சாத்தியமா என்பதைக் கவனிப்பேன்.

Mylapore Bus Stand.

* 552 *Q.*—THIRU G. GOMATHY SANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there are proposals to shift the Government bus terminus at Sri Kapaleeswarar Temple Tank, Mylapore, to Mandavalli ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) whether the views of the residents of the area have been obtained for this move ?

[1969 மார்ச் 31

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

அரசு ஊழியர்களுக்கு பேருந்துகளில் இலவசச் சீட்டுகள்.

*553 வினா—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

அரசு பேருந்து வண்டிகளில் செல்லுவதற்காகச் சென்னை நகரில் சர்க்கார் ஊழியர்களுக்கு இலவசச் சீட்டு (**free pass**) வழங்குவதற்கு சர்க்காரிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : சர்க்கார் ஊழியர்களுக்கு இப்படி இலவசச் சீட்டு கொடுப்பதில் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டமாகும் ? இதை மீண்டும் பரிசீலனை செய்து இலவசப் பாஸ் கொடுப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த இலவசப் பாஸ்கள் கொடுப்பதில் எவ்வளவு நஷ்டம் என்ற பிரச்சினை எழவில்லை. **1967**-ல் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள் ஒரு மனு கொடுத்தார்கள். அதில் இலவச பாஸ், அல்லது அதற்குப் பதிலாக போக்குவரத்து படி ரூ. 10 என்று கேட்டிருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு இங்கு செயலகத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு மத்திய அரசு கொடுக்கிறபடி, நகரப்படி, அகவிலைப்படி இவை கொடுத்து விட்டபடியால் இலவச பாஸ் கொடுக்கிற பிரச்சினை மீண்டும் எழவில்லை.

கோயில்களிலிருந்து சிலைகள் களவு.

*547 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966–67-ம் ஆண்டில் கோயில்களிலிருந்து களவுபோன சிலைகள் எத்தனை ?

(இ) அதன் காரணமாக வழக்குகள் தொடரப்பெற்றனவா ?

(உ) ஆம் எனில், எத்தனை வழக்குகள் வெற்றி பெற்றன, எத்தனை வழக்குகள் தோல்வியுற்றன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) 77.

(இ) ஆம். 12 வழக்குகள் தொடரப்பட்டன.

(உ) 11 வழக்குகள் வெற்றிபெற்றன. 1 முடிவு பெறவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : திருட்டுப்போன சிலைகள் எந்தக் கடவுள் களுக்குச்சொந்தமானவை ? இனிமேல் இந்தக் கடவுள்களைக் காப்பாற்று வதற்காக தனியாக ஒரு போலீஸ் படையை அமைக்க அரசுக்கு ஏதாவது உத்தேசமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: நாற்பது கோவில்களில் சிலைகள் திருடு போயிருக்கின்றன. அவை மாவட்டவாரியாக இருக்கின்றனவே தவிர, எந்தெந்த சாமிகள் என்பது பற்றி தகவல் இல்லை. இது சம்பந்த மாக தனியாக ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ் போட்டு புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

திரு. தி. பொன்னுமலை : அடிக்கடி சாமி கோவில்களில் சாமி விக்கிரகங்கள், சாமியின் நகைகள் இவை பல்வேறாக திருடு போய்க் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோவிலிலும் பல வகைப்பட்ட சாமிகள் இருக்கின்றன. சாமிகளுக்குள்ளேயே சாமிகள் திருட்டுப்